Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (16 - 01 - 1991) புதன்கிழமை ஓசை: 332

## வாகன பறிமுதலால் மலேரியா தடுப்பு நடவடிக்கை முடக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவில் மலேரியா தடுப்பியக்கத்திற்கு சொந்தமான வாகனங்களில் பெரும்பாலானவை பாதுகாப்புப் படையினர் தமது பாவனைக்கு எடுத்துச் சென்றுள்ளதால் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேல்மாகாணத்தில் மட்டும் மலேரியா தடுப்பியக்கத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகரில் இராணுவத்தின் அடாவடித்தனம் அதிகரிப்பு

## பயணிகள் மீது தாக்குதல்; துப்பாக்கிச் சூடு

(வவுனியா)

வவுனியா நகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் மீண்டும் அதிகரித்துவரும்வேளை வவுனியா நகரில் அகதிமுகாமில் இருந்த கொழும்பு செல்லும் அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள்மீது சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நகரப்பகுதியில் கூடிய மக்கள்மீது கடுமையான தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதில் இருவர் காயமடைந்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து மக்கள்கிலி கொண்டு சிதறி ஓட்டம் எடுத்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் கண்மூடித்தனமாக நாலாபக்கமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத்தாக்குதலில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

அதேவேளை சில தினங்களுக்கு முன்னர் வவுனியா சென்ற சிலர் வரிசையாக நிற்க வைத்தும் சுடப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தைப்பொங்கல் தினத்தை சிறிலங்கா அரசு போர் நிறுத்தம் என அறிவித்தபோதிலும் சிறிலங்கா இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் போர் நிறுத்தத்தை மீறியுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனி (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் யுத்தநிறுத்த வேளையில் கண்டாவளையில் குண்டுவீச்சு

(கண்டாவளை)

சிறிலங்கா அரசின் தைப் பொங்கல் தின போர்நிறுத்த அறிவிப்பை சிறிலங்கா விமானப்படையினர் அப்பட்டமாக மீறியுள்ளனர். நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் கண்டாவளையில் சந்தைக்கு அண்மையில் உள்ள குடியிருப்புக்கள் மீது குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

காலை 9.00 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ராமலிங்கம் என்பவரது வீடு முற்றாக சேதமடைந்தது. (க)

## மாணவர் அடக்கு முறைக்கு எதிராக மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரச தமிழீழ மாணவர்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டு வரும் அடக்கு முறைகளையும் அட்டூழியங்களையும் எதிர்த்து மாபெரும் சயிக்கிள் பேரணி ஒன்றை இன்று தமிழீழ மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

அரசு, மாணவர்கள் மீது மேற்கொள்ளும் இவ்வாறான அடக்கு முறைகளைச் சுதேச (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்லும் நோயாளிகள் பதிவு செய்து கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய

## அனாதரவாக வீசப்பட்ட சிசு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயத்தின் முன்பாக உள்ள வளவு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை பெண் சிசு

## வீரவணக்கம்

### பாமதி

(தெல்லிப்பளை)

மாவிட்டபுரத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் காவலரணை நோக்கி முன்னேறிய சமயம் தற்காப்புக்காக புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்ட சமயம் ஏற்பட்ட மோதலில் பாமதி (சாந்தி யோசப், தோப்பூர்-திருமலை) என்ற போராளி வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (க)

## நோயினால் தற்கொலை

(வவுனியா)

நோயின் உக்கிரத்தை தாங்கிக் கொள்ள முடியாத குடும்பஸ்தர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கோயில் குளத்தைச் சேர்ந்த ஐ. ஆறுமுகம் (வயது 54) என்பவர் நேற்றுக் காலை எட்டு மணியளவில் தன்னைத் தானே சுட்டு மரணமானார். ஒன்பது பிள்ளைகளின் தந்தையான

(கண்டாவளை)
சிறிலங்கா அரசின் கைப் பொம்மை தின போர்நிறுத்த அறிவிப்பை சிறிலங்கா விமானப்படையினர் அப்பட்டமாக மீறியுள்ளனர். நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் கண்டாவளையில் சந்தைக்கு அண்மையில் உள்ள குடியிருப்புக்கள் மீது குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

காலை 9.00 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ராமலிங்கம் என்பவரது வீடு முற்றாக சேதமடைந்தது. (க)

தாக்குதலில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

மாபெரும் சயிக்கிள் பேரணி ஒன்றை இன்று தமிழீழ மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ள

# தமிழக தி.மு.க. அரசை கலைக்க சந்திரசேகருக்கு அவகாசம்

(டில்லி)
தமிழ்நாடு அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்துக் கடைசியாக வெளிவந்த தகவலின் அடிப்படையில் தமிழ்நாட்டிலும் தி. மு. க. அரசாங்கத்தைக் கலைத்து அம்மாநிலத்தின் நலன்களைப் பாதுகாக்குமாறு இந்தியப் பிரதமர் சந்திரசேகருக்கு இந்திரா காங்கிரஸ் கட்சி காலக்கெடு கொடுத்திருப்பதோடு, கடுமையான தொனியில் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் பற்றிப் பிரதமர் சந்திரசேகர் பாரா
(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு செல்லும் நோயாளிகள் பதிவு செய்து கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)
கொழும்புக்குச் சிகிச்சை பெற செல்லவுள்ள நோயாளர்கள் கப்பலில் செல்வதற்கு 17-1-91, 18-1-91 ஆகிய இரு தினங்களிலும் (வியாழன், வெள்ளி) காலை 10 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலைக்கு சமூகம் கொடுத்து பதிவுசெய்து கொள்ள வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் தெரிவித்துளளர்.

நோயாளியோ அல்லது அவ
(4ஆம் பக்கம் பார்க்க)

## அனாதரவாக வீசப்பட்ட சிசு

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயத்தின் முன்பாக உள்ள வளவு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை பெண் சிசு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச்சிசு பிறந்த சில நிமிடங்களுக்குள் அனாதரவாக வீசப்பட்டது. காலையில் இந்தச் சிசுவைக் காகங்கள் கொத்திக் கொண்டிருந்தபோது
(4ஆம் பக்கம் பார்க்க)

தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கோயில் குளத்தைச் சேர்ந்த ஐ. ஆறுமுகம் (வயது 54) என்பவர் நேற்றுக் காலை எட்டு மணியளவில் தன்னைத்தானே சுட்டு மரணமானார் ஒன்பது பிள்ளைகளின் தந்தையான இவர் நீண்ட காலமாக கடும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## குளத்தில் மூழ்கி சிறுமி மரணம்

(புங்குடுதீவு)
விளையாடச் சென்ற சிறுமி குளத்தில் மூழ்கி மரணமான சம்பவம் ஒன்று புங்குடுதீவுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி சுயந்தினி (5 வயது) என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானார்.
(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. சபையில்

# வளைகுடாவில் போரைத் தடுக்க பிரான்சின் 6 அம்சத்திட்டம்

(நியூயோர்க்)
வளைகுடாவில் போர் நிகழாமல் தடுப்பதற்கு பிரான்ஸ் கடைசிநேர இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக பிரான்ஸ் அரசாங்கம் சமர்ப்பித்த ஆறு அம்சத் திட்டத்தினை ஐ நா. விவாதத்திற்கு எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக குவைத்தை விட்டு ஈராக் உடன் வெளியேற வேண்டும். அதேவேளை அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேசப் படையினர் ஈராக்மீது தாக்குதல் நடாத்துவதில்லையென உத்தரவாதம் தரவேண்டும். அடுத்ததாக அரபுநாடுகளை உள்ளடக்கிய ஐ. நா. சமாதானப் படை ஒன்று அப்பிராந்தியத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மேலும் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்றை ஐ. நா. கூட்டவேண்டும் என்பன அடங்கிய திட்டத்திற்கு ஐ. நா. உத்தரவாதம் அளிக்கவேண்டுமெனபிரான்ஸ் தனது திட்டத்தில் கோரியுள்ளது.

இத்தீர்மானத்தை ஐ. நா.
(4ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற் பயிற்சித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் பல தொழிற் பயிற்சித் திட்டங்கள் தற்போது நடாத்தப் பட்டு வருகின்றன.

இப்பிரிவின் கீழ் ஆண்களுக்கான உடை தயாரித்தல் வெண் கட்டி, காகிதம் உற்பத்தி தும்புத் தடி, கயிறு தயாரித்தல் யோகட் பிஸ்கட் போ
(4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மதிய உணவு

# விரைவில் கிடைக்கலாமென மேலதிக அரச அதிபர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட பாடசாலைகளில் முன்பு வழங்கப்பட்டு வந்ததுபோல தொடர்ந்தும் மதிய உணவு வழங்குவதற்கான உணவுப் பொருள்கள் விரைவில் வடபகுதிக்கு கொண்டுவரப்பட உள்ளது என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை பத்து மணியளவில் ரேடியோ தொலைதொடர்பு கருவிமூலம் கொழும்புடன் தொடர்பு கொண்ட அவர் மேற்படி விடயத்தை தெரிவித்ததுடன், மேலும் நிர்வாகசேவை பரீட்சை விண்ணப்பதாரிகளின் பரீட்சை திகதிபற்றி குறிப்பிடுகையில் எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி இந்த பரீட்சைகள் கொழும்பில் இடம்பெற உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

### பிறப்பு சாட்சி பத்திர விண்ணப்பம்

கடந்த காலத்தில் ஸ்தம்பித்துப் போயிருந்த பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் பதியும் வேலையாவும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் யாழ் செயலக இறப்பு பிறப்பு பதிவு அலுவலகத்திற்கு விண்ணப்ப படிவங்
(4ஆம் பக்கம் பார்க்க)

# வேம்பிராயில் வான்மோதி இருவர் மரணம்; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
வேம்பிராய்ப்பகுதியில் வேகமாக வந்த டெலிக்காவான் மோதியதில் இருவர் மரணமடைந்துள்ளனர். மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று முப்பது மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த க இளையதம்பி என்பவரும், க. தர்மராஜா என்பவரும் மரணமடைந்துள்ளனர். தர்மராஜாவின் மகன் சச்சிதானந்தன் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## சோவியத் இராணுவ நடவடிக்கைகள்

# லித்வேனியாவில தொடர்ந்தால் உதவிகள் நிறுத்தப்படும்

(வாஷிங்டன்)
லித்வேனியாவில் சோவியத் யூனியனின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் சோவியத் உடனான பொருளாதார ஒத்துழைப்பை ரத்துச் செய்யப் போவதாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் அறிவித்துள்ளன.

லித்வேனியாவில் அதன் பிரதமமந்திரி ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து சோவியத் ராணுவம் அங்கு சென்று ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டதும் 100க்கும்மேற்பட்டோர் காயமடைந்ததும் தெரிந்ததே,
(4ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று பி. எல். ஓ தலைவர்கள் ரியூனிசியாவில் சுட்டுக் கொலை

(ரியூனிஷ்)
ரியூனிசியவில் பி. எல். ஓ என்று அழைக்கப்பட்ட பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் துணைத்தலைவர் அபுஇயாசும் பாதுகாப்பு பிரிவுத்தலைவர் அபுஅல்கோஸ், மெய்ப் பாதுகாவலர் ஒருவரும் உட்பட மூன்றுபேர் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது. இஸ்ரேலின் தூண்டுதலின் பேரிலேயே
(4ஆம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# நூற்றாண்டு விழா

## அழைப்பு

1890 / 1990

ஈழத்தமிழ் உலகில், தனது கல்விப்பணியில்
**ஆண்டுகள் நூறு** கடந்தேறிய
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
கொண்டாடும்
நூற்றாண்டு விழாக் கட்டடக் கால்கோள்
நிகழ்விற்கும், கலாசார விழாவுக்கும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா நாள்கள்:
**1991-01-17, 18, 19, 20.**

சுந்தரம் டிவகலாலா,
செ. சிவராஜா
இணைச் செயலர்,
நூற்றாண்டு விழாக் குழு.

ஆ. இராஜகோபால்,
செயலர்,
கலாசாரக் குழு.

க. சி. குகதாசன்,
தலைவர், நூற்றாண்டு விழாக் குழு.

(B. 1863)

பாடசாலை ஆசிரியர், மாணவர் உடைமை

# சேதங்கள் பற்றிய தகவல்கள் திரட்டுவதற்கான நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ தாக்குதல்களால் உயிர்நீத்த, அங்கவீனர்களான மற்றும் இடம் பெயர்ந்த ஆசிரியர், மாணவர்களின் பெயர் விபரங்களையும், சேதமடைந்த பாடசாலைகளின் விபரங்களையும் அவசரமாக சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

இவ் விடயம் சம்பந்தமாக அவர் ஒருசெய்திக்குறிப்பையும் வெளியிட்டுள்ளார்.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் இடம் பெயர்ந்து வந்துள்ள உள்மாவட்ட வெளிமாவட்ட மாணவர்களை ஆண்கள், பெண்கள் என பகுதி பகுதியாக அவர்கள் இருக்கும் முகாம்களின் பெயர்களுடன் தனியார் வீடுகளாயின் அவற்றையும் முகாம்களாக கருத்தில் கொண்டு விபரங்களை திரட்ட வேண்டும். இந்த விபரம் சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டதும் பின் வரும் அன்பளிப்பு ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு வழங்கவென கொடுக்கப்பட உள்ளது.

5ஆம் 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கு வரைதல் கொப்பி ஒன்று, எண்பது பக்க கொப்பி ஒன்று பென்சில் ஒன்று இரேசர் ஒன்று. 6 ஆம், 7 ஆம் 8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கட்டுக்கொப்பி இரண்டு, பேனா ஒன்று, பென்சில் ஒன்று, அடிமட்டம் இவைதவிர இடம்பெயர்ந்த ஐம்பது மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு ஒரு கரும்பலகை, வெண்கட்டிப்பெட்டி ஒன்று உதைபந்து ஒன்று என்பனவும் வழங்கப்படுவதுடன் மாணவ மாணவியருக்கான சீருடையும் வழங்கப்பட உள்ளதுஎன பணிப்பாளர் அக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

(லோ)

# அத்தியாவசிய பொருள்கள் திருட்டு அதிகரிப்பு

(செ. த. மை.)

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதினால் உணவுப் பொருள்கள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தெல்லிப்பளை - விராங்கொடைப் பகுதியில் மட்டும் ஒரு நாளில் மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. த. மகேந்திரராசா என்பவரின் வீட்டில் தையல் இயந்திரம், மின்னழுத்தி 7,000ரூபா பெறுமதியான எவர்சில்வர் பாத்திரங்கள், அரை மூடை, அரிசி, மாவு, மைசூர்ப் பருப்பு என்பனவும், நாகரத்தினம் என்பவர் வீட்டில் 24 கிலோ அரிசி, 15 கிலோ மாவு, 8 கிலோ சீனி உடுபுடைவைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மின்னழுத்தி என்பனவும், பொ. கோவிலா என்பவர் வீட்டில் அரிசி, மாவு, சீனி, சைக்கிள் உதிரிப்பாகங்கள், என்பனவும் களவாடப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தெல்லிப்பளை பிரதேசசபை அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது அச்சுவேலி நவக்கிரிப் பகுதியில் உள்ள தோட்டங்களில் வாழைக்குலைகளும் வீடுகளில் கோழிகளும் திருடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கப்டன் மாஸ்டர் அவர்களுக்கு

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

விடுதலைக்கு உதிரத்தை உரமாக்கிய
வேங்கையே உனக்கு எம்

## வீரவணக்கங்கள்!!

**2ஆவது லெப். பிலிப்ஸ், பப்பா**
**(கி. இரகுநாதன்)**

| தாயின் மடியில் | | தமிழீழக் களத்தில் |
|---|---|---|
| 21 - 09 - 1963 |  | 16 - 01 - 1986 |

அன்பு ரகு,

உயர்கல்வி பயின்றிடும் போதினிலே ஒடுக்குமுறைக்கெதிராக உள்ளத்தே ஊற்றெடுத்துரிமை வேட்கையால் வேங்கையானாய்!

தமிழீழத் தாயகம் மீட்டிடத் தாகங்கொண்டு, தாயகத்து எல்லைவிட்டு எதிரிகளைத் துரத்திட வன்னி மண்ணில் வியத்தகு வீரம் விளைத்தாய்!

எத்தனையோ இளம் வேங்கைகள் எங்கள் அன்னை பூமியின் விடுதலைக்காகப் பரிமாறிய பச்சைரத்தத்தோடு உன்னுதிரமும் இணைந்து உரமாயிற்று!

முதல் முதலில் காங்கேசன்துறை மண்ணிலிருந்து தமிழீழ விடுதலைக்கு களப்பலியான காளையே! உன் நினைவுகள் எம் நெஞ்சத்தே என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

விடுதலை வேள்வியில் ஆகுதியாகி எம் இதயத்தே வேதனைத்தீயை மூட்டினாய்! அது நீ மூட்டிய விடுதலைத் தீயாகக் கனன்றெரிந்து நாளை அடக்குமுறையை அழிக்கட்டும்! அடிமை விலங்கை ஒடிக்கட்டும்!!

உன்னத இலட்சியத்துக்காக உயிர் கொடுத்த உத்தமனே! உனக்கு எம் வீர வணக்கங்கள்!!

உன் நினைவு மறவாத
நாயன்மார்கட்டு அன்புநெஞ்சங்கள்

(B/1865)

# வீர அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| ஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 30 - 03 |  | 19 - 12 |

ஜனனம்


30

-

03

-

1964



வீரமரணம்

19

-

12

-

1990

## கப்டன் சுந்தரி

### (உ. உதயலட்சுமி - வல்வை)

## கோ - மகளே! நீ எங்கே?

வண்ண மலராய், வளரும் பயிராய்
 வடிவம் தந்தவளே! நீ - எங்கே?
எண்ண மழையாய் எம் இனத்தின் குரலாய்,
 தமிழ் மண்ணில் உதித்த - தங்க நிலவே நீயும் எங்கே?

அண்ணன் இருவர் காட்டிய வழியே
 அரும் பணியும் தொடர்ந்த ஆராவமுதே! நீ எங்கே?
கண்ணின் மணியாய் கருத்துள் நிறைந்த
 கனகமணி முத்தே நீ - மறைந்ததும் எங்கே?

அல்லும் பகலும் அசையும் பொழுதெலாம்
 அடிமை விலங்கும் பொடிபட நினைந்தே
கொல்லும் பகைதனை கொடுஞ்சிறை கொள்ளவும்
 கொதித்தே எழுந்த கோ - மகளே! நீ எங்கே?

சொல்லும் செயலும் நன்றாய் இணைய
 சொந்தம் பந்தம் நினையா உருவாய்
வெல்லும் புலியின் கொடியும் உயர
 வேதம் உரைத்திட்ட நா - மகளே!
  நீயும் எழுந்தே வருவாய்!

எங்கள் அன்புப் புத்திரி வீரமரணமடைந்ததைக் கேள்வியுற்று மரணச்சடங்குகளில் பங்குபற்றிய அனைவருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, 17-01-1991 வியாழக் கிழமை காலை 6-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்கத் தோழர்கள், தோழியர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வெட்டித்துறை. பெற்றோர், சகோதரசகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்.

(B-1864)

7,000ரூபா பெறுமதியானவர் சில்வர் பாத்திரங்கள், அரை மூடை, அரிசி, மாவு, மைசூர்ப் பருப்பு என்பனவும், நாகரத்தினம் என்பவர் வீட்டில் யில் உள்ள தோட்டங்களில் வாழைக் குலைகளும் வீடுகளில் கோழிகளும் திருடப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கப்டன் மாஸ்டர் அவர்களுக்கு வடமராட்சியில் அஞ்சலி

(வடமராட்சி)

நெடுந்தீவுப்பகுதியில் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வீரமரணமடைந்த கப்டன் மாஸ்டரின் (பிரதாபன்- பருத்தித்துறை) புகழுடம்பு கடந்த வெள்ளிக்கிழமை கரவெட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நவிண்டிலில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

பெருந்திரளான பொது மக்கள் மலர்கள் தூவியும் மலர்மாலைகள் சாத்தியும், மாஸ்டரின் புகழுடம்புக்கு அஞ்சலிசெலுத்தினர். (18)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானம் இராஜேஸ்வரி

முடமாவடி

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி 14. 01. 1991 இல் காலமாகிவிட்டார், இவர் வி. சிவஞானம் (வர்த்தகர், அழுத்கம) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற அப்பாக்குட்டி (சாமியார்) இராமசாமி, அன்னப்பிள்ளையின் அன்பு மகளும், யோகேந்திரா (பிரதம பொறியியலாளர், சிலாபம்), தவேந்திரா (அரச நில அளவையாளர், மாஹோ), ஜீவேந்திரா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரராஜசிங்கம் வடிவாம்பாளின் அன்புச் சகோதரியும், கமலினி யோகேந்திரா (ஆசிரியை, சிலாபம்), வசந்தி தவேந்திரா (ஆசிரியை, முத்துத் தம்பி வித்தியாலயம்), கமலினி பத்மகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவஞானம் பத்மகாந்தன் (லண்டன்), ரகுமார், சுகுமார் ஆகியோரின் அன்புச் சிறியதாயும், சுமித்திரன், கோசலா, தாரிணி, கரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முடமாவடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி. தவேந்திரா

(R/1053)

உன்னத இலட்சியத்துக்காக உயிர் கொடுத்த உத்தமனே! உனக்கு எம் வீர வணக்கங்கள்!!

உன் நினைவு மறவாத
அன்புநெஞ்சங்கள்

நாயன்மாரிகட்டு

(B/1865)

## நினைவு கூருகின்றோம்!

## தை 16

1986ஆம் ஆண்டு உருத்திரபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**2ஆம் லெப்: பப்பா, பிலிப்ஸ்**
(கி. இரகுநாதன் - காங்கேசன்துறை)

**உக்கன்** (இ. ஜெகநாதன் - கிளிநொச்சி)

**ரகு** (சி. இதயரூபன் - ஜெயந்திநகர்)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**பிரகாஷ்** (தி. சூற்குணம் - கூனித்தீவு)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வீதிகளில் அவர் போகவும்
நாய்கள் கூடக் குரைப்பதில்லை
மனிதர்கள் அச்சமுறுவ தில்லை
குழந்தைகள் அவரிடம்
நட்பும் உரிமையும் கொள்கிறார்கள்
அவனது துப்பாக்கியை
இந்த மனிதர்கள் நேசிக்கிறார்கள்
அவரைத் தன்னுடைய புதல்வர்
என்பதில் பெருமிதம் கொள்கிறது தேசம்.

- விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-1850)

## சிந்தனைக்கு

தலைவன், அல்லது நெருக்கடிக் கட்டத்தில் செயல்வீரன், எப்பொழுதும் அகனமர்ந்த உந்துதல் பேரில்தான் செயலாற்றுகிறான்.

— ஜவஹர்லால் நேரு


ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம் 16-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# பல தடவை கேட்ட சவால்

வடக்கு - கிழக்கில் விடுதலைப்புலிகளையும் அதன் தலைமையையும் அடுத்த ஆறுமாத காலத்திற்குள் சிறிலங்கா இராணுவத்தால் தீர்த்துக்கட்டிவிட முடியும் என்று சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

தமிழர் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கு அரசியல்வாதிகளும், இராணுவத்தளபதிகளும் காலக்கெடு விதிப்பது இது முதற்தடவையல்ல, அதை எதிர்கொள்வது புலிகளுக்கும் முதற் சம்பவமும் இல்லை.

1979 ஆம் ஆண்டு தமிழரின் போராட்டத்தை மூன்று மாதத்திற்குள் அழித்தொழித்துவிட்டுவருமாறு முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா பிரிகேடியர் வீரதுங்காவை அனுப்பினார். யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் வீரதுங்கா பல படுகொலைகளைச் செய்துவிட்டு வெறும் கையுடன் கொழும்பு திரும்பினார்.

பின்னர் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட 'புலிகளுக்கு எதிரான நடவடிக்கையால்' ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் புலிகள் அழியவில்லை; வளர்ந்தார்கள்.

இந்த நிலையில் 1987 இல் இலங்கை வந்த இந்திய இராணுவமும், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைக் காலக்கெடுக்களுடனேயே ஆரம்பித்தது. தமது புஜபலத்தை காட்டினால் மட்டுமே (தாக்குதல் இல்லாமல்) தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் பணிந்துவிடுவார்கள் என்றே இந்தியா முதலில் எண்ணியது. ஆனால் புலிகளோ எவற்றைக் கண்டும் அஞ்சவில்லை இந்திய இராணுவமும் காலக்கெடுக்களுடன் ஆரம்பித்த யுத்தங்கள் எவையும் வெற்றியைத்தேடிக்கொடுக்கவில்லை அவர்களால் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டதே நிகழ்ந்தது.

இன்று மீண்டும் விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் அழிப்பதற்கென சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா காலக்கெடு விதித்துள்ளார்.

காலக்கெடு விதிப்பவர்களை எதிர்கொள்வது விடுதலைப்

# நாலாம் மாடி சென்ற நம்மவன் "நாதன்"!


மொட்டை நாதன் தமிழீழ விடுதலையை நேசிக்கும் அனைவராலும் மொட்டைநாதன என்று அன்பாக அழைக்கப்படும் இவன் மறைந்து மூன்றாண்டுகளாகி விட்டன. காக்கிச் சட்டைகள் என்றால் அவர்களோடு முண்டுவது சிக்கல், அது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று கருதப்பட்ட காலங்களில் அநீதியை எதிர்ப்பதில், ஸ்ரீலங்கா அரசபடைகளின கொடுமையைவெளிக்கொணர்வதில், அதன் முகத்திரையைக் கிழிப்பதில், தனது உயிரைத் துச்சமாக மதித்தவன் இவன்.

1981ஆம் ஆண்டு சுபாஸ் ஹோட்டலில் தங்கியிருந்த ''பௌத்த மதத்தின் காவலர்களான'' அமைச்சர்கள் காலம் சென்ற சிறில் மத்யூ, காமினி திஸநாயக்க போன்றோரை மகிழ்விக்கவான வேடிக்கை காண்பிப்பதற்காக யாழ்நகரையே தீக்கிரையாக்கினர். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதன் பேரில் தமிழீழத்துக்கு அனுப்பப்பட்ட ஸ்ரீலங்கா பொலிஸ்படைகள தமிழ் மக்களின் சொத்தாக விளங்கிய அறிவுக் களஞ்சியமம் யாழ் பொதுசன நூலகத்தையும், மற்றும் பல்வேறு பகுதிகளையும் தீக்கிரையாக்கி முடித்ததும் தமிழ் மக்களின் அடுத்தபொருளாதாரநிலையம் எதுவெனத் தேடினர். சுன்னாகம் நகரப் பகுதிதான் அது எனப் புரிந்தனர். சுன்னாகத்திலும் ''சொக்கப்பானை விழா.'' மக்கள் கொதித்தனர். மக்களின் மனநிலையைப் புரிந்த அப்போதைய பாராளுமன்ற அரசியல் வாதிகள் ஜெயவர்த்தனா அரசுடன் ஊடல் கொண்டனர். 'இதோ புதியதொரு கமிஷன் உங்களுக்கு நீதி வழங்கப்படுகிறது'' என்று கூறி லயனல் பெர்னான்டோ தலைமையிலான ஒரு கமிஷனை சிறிலங்கா அரசு அனுப்பியது. சன்சோனியையும், அதற்கு முந்திய கமிஷன்களையும், அதனால் என்ன பலன் ஏற்பட்டது என்பதையும் மறந்து லயனல் பெர்னான்டோ கமிஷனின் தீர்ப்பை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் பதவியின் 'அதிமுக்கிய தேவையைக்கருத்திற்கொண்டு' பாராளுமன்றம் சென்றனர் அனைய தலைவர்கள், மற்றும் அங்கத்தவர் பதவிகளும் உங்களுக்கே என்ற ஜே. ஆரின் வாக்குறுதியை ஏற்று அதன் சுகத்துக்காக உண்மையை குழிதோண்டிப் புதைத்தனர் பாராளுமன்ற அரசியல் வாதிகள். ஜனநாயகத்தின் கழுத்தில் சுருக்கு மாட்டிய அந்தத் தேர்தல் (மாவட்ட அபிவிருத்திச்சபை) நேர்மையாக, ஒழுங்காக நடந்ததாக நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி தாக்கல் செய்தனர்.

இதேநேரம் சாதாரண ஒரு பொதுமகன் (நாதன்) லயனல் பெர்னான்டோ கமிஷன் முன் உண்மைக்காக வாதாடிக் கொண்டிருந்தான். சுன்னாகம் நகரப் பகுதியை எப்படி எரித்தார்கள் என்பதை ஆணித்தரமாகக் கூறிக் கொண்டிருந்தான். ''நாலாம் மாடி நம் சொந்த வாடி'' என்று முழங்கியவர்கள் நஷ்ட ஈடு என்ற பெயரால் லட்சாதிபதியானார்கள். இதே நேரம் இலட்சியத்திற்காகப் போராடிய நாதன் நாலாம் மாடிக்கு அனுப்பப்பட்டான். நாலாம் மாடியில் நடைபெற வேண்டிய 'சகல சடங்குகளும்' இவனுக்கு நடந்தன.

அங்கிருந்து மீண்டு வந்த இவன் உண்மையான விடுதலைப்போராளிகளைத் தேடிக் கொண்டான். தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களின் தொடர்பு இவனுக்கு கிடைத்தது அவர்களுக்குப் புகலிடம் கொடுப்பதில், ஆதரவளிப்பதில் முன் நின்றான். விடுதலை இயக்கத்தில் பல இளைஞர்களை இணைப்பதிலும் பெரும்பங்கு வகித்தான். தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்ற திலீபன் போன்ற இளைஞர்கள் நாதன் மூலமாகவே இயக்கத்தில் இணைந்துகொண்டனர். குடும்பநிலையைக் கருத்திற்கொண்டு தான் வகித்து வந்த காவற்காரன் வேலையை உதற முடியாமல் இருந்த அவன் பல்வேறு வழிகளிலும் போராட்டத்திற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கிக் கொண்டேயிருந்தான்.



ஒப்பந்தம் என்ற பெயரால் அந்நியப்படைகள் எம் மண்ணில் காலடிபதித்ததும் விடுதலை உணர்வு கொண்டவர்களைத் தேடி வலை விரித்தனர். இவர்களுக்குத் துணையாக தேசத்துரோகிகளும் இருந்தனர். ஒருநாள் இவன் கைதியானான். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரனை எங்கிருந்தோ வந்தவர்கள் கைதியாக்கினர். அவனை அடித்தனர்; உதைத்தனர். இவர்களது சப்பாத்திக்குக் கடமைப்பட்ட தேசத்துரோகிகளின் சப்பாத்துக் கால்களும் இவன் உடலில் பதிந்தன இவன் மறைந்தான். அன்றைய பொழுதில் அது ஒரு சம்பவம். நாளடைவில் இப்படியான சம்பவங்கள் சரித்திரமாகின.

இவனைக் கொன்றவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்து விட்டார்கள். ஆனால் இவன் மறையவில்லை மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ளான்.

இந்திய இராணுவமும் [illegible]
யுத்தங்களைவையும் வெற்றியைத்தேடிக்கொடுக்கவில்லை அவர்களால் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டதே நிகழ்ந்தது.

இன்று மீண்டும் விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் அழிப்பதற்கென சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா காலக் கெடு விதித்துள்ளார்.

காலக்கெடு விதிப்பவர்களை எதிர்கொள்வது விடுதலைப் புலிகளுக்கு புதுவிடயமொன்றல்ல ஆனால் அவர்களின் காலக்கெடு அறிவிப்புக்கள் அவர்களின் நோக்கங்களை தெளிவாக வெளிக்காட்டுகின்றன அதாவது தமிழரின் பலமான சக்தியை அழித்தொழித்துவிடுதல் என்பதே இந்தக் காலக்கெடுக்களின் நோக்கமாகும்.

விடுதலைப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கியதில் இருந்து விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் சவாலாகவே இருந்து வந்தது அதேபோன்று இந்தியாவிற்கும் என்றும் விடுதலைப்புலிகள் சவாலாகவே இருந்தனர் இதன் காரணமாக சிறிலங்காவிற்கும் சரி இந்தியாவிற்கும் சரி விடுதலைப் புலிகளின் தலைமையை அழித்துவிடுதல் என்ற உள்நோக்கம் தொடர்ச்சியாக இருந்தே வந்துள்ளது.

தமிழீழப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்த இராணுவ நடவடிக்கைகளில் செக்மேற் ஒன்று, செக்மேற் இரண்டு, செக்மேற் மூன்று ஆகிய இராணுவ நடவடிக்கைகள் எல்லாம் தலைவர் பிரபாகரனை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டமையே ஆகும்.

அத்தோடு விடுதலைப்புலிகளுக்குள் உள்முரண்பாட்டை தோற்றுவிக்க பிரசார ரீதியாக தீவிர முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. தலைவர் பிரபாகரன் படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என அடிக்கடி செய்தியை வெளியிட்டு குழப்பத்தையும் ஏற்படுத்தினர் அதாவது புலிகளின் தலைமைக்கு நெருக்கடி கொடுத்தல் அல்லது குழப்பத்தை விளைவித்தல் அல்லது அழித்தல் என்பதே அவர்களின் நோக்கமாகவிருந்தது.

இவ்வாறு, சிறிலங்கா, இந்தியா ஆகிய இரு அரசுகளும் தலைவர் பிரபாகரன் மீதும் புலிகள் மீதும் ஆத்திரம் கொள்வதற்கு காரணம் தமிழரின் உரிமைகள் விட்டுக்கொடுப்பிற்கோ, அல்லதுபேரத்திற்குஅப்பாற்பட்டவை என்ற அவர்களது கோட்பாடேயாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்ப்பது முன்னைய தமிழ்த் தலைவர்கள் போன்று அரசியலை ஒருபகுதிநேரப் பொழுதுபோக்காகவும், கௌரவத்திற்குரிய தொழிலாகவும்கொண்டதோடு, அந்த அரசியல்வாதிகளின் சுயலாப நட்டத்திற்கேற்ப தமிழர் உரிமையை ஒரு பிண்டமாகப் பேரம்பேசக் கூடியதானதலைமையினையே.

ஆகையினால் தமிழருக்கு இன்று கிடைத்துள்ள பலமான தலைமையை அழித்தலே தமிழரை அடிபணியச் செய்வதற்குரிய ஒரேவழி என சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் எண்ணுகின்றன; செயற்படுகின்றன.

இந்த நிலையில், தமிழரின் உரிமைகளை வென்றெடுக்க விடுதலைப் புலிகளையும், அதன் தலைமைத்துவத்தையும் மக்கள் பலப்படுத்த வேண்டும், பலமான தலைமையே அடக்கப்பட்ட மக்களின் உரிமையை வென்றெடுக்கும். வரலாறும் இதனையே தெரிவிக்கின்றது

---

னாண்டோ தலைமையிலான ஒரு கமிஷனை சிறிலங்கா அரசு அனுப்பியது. சன்சோனி யையும், அதற்கு முந்திய கமிஷன்களையும், அதனால் என்ன பலன் ஏற்பட்டது என்பதையும் மறந்து லயனல்

ளுக்குப் புகலிடம் கொடுப்பதில், ஆதரவளிப்பதில் முன்நின்றான். விடுதலை இயக்கத்தில் பல இளைஞர்களை இணைப்பதிலும் பெரும்பங்கு வகித்தான். தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்ற

இவனைக் கொன்றவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்து விட்டார்கள். ஆனால் இவன் மறையவில்லை மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ளான்.

---

# “ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் தமிழீழமக்கள் வாழவேண்டும்”

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வுகள் எதுவும் இல்லாது சமூகத்தோடு இணைந்து சமத்துவமாக வாழ வேண்டும்.

இவ்வாறு கடந்த வெள்ளி வலிகாமம் யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இச்சங்கத்தில் உள்ளோர் பல வழிகளிலும் தமது பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். பலர்

—— ராஜன் ——

ஆயுதமேந்தியும் போராடி வருகிறார்கள். அங்கவீனர்கள் என்று எவரையும் ஒதுக்கி வைக்காது முழு உரிமைகளும் உங்களுக்குக் கிடைக்கப் பாடுபடுவோம்” என்றார்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், “உதவும் கரங்கள்” திரு. சண்முகநாதன், பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. பாலநாயகம், நவீகட் உபஅதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தொடர்ந்து செவிப்புலனற்றோர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகசபை உத்தியோகஸ்தர்கள் தேர்தலும் இடம் பெற்றது. (மு)

## நம்பிக்கை மோசடி

(செ. த. மை)

மல்லாகம் பங்களா ஒழுங்கையைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில், நம்பிக்கை மோசடி செய்ததாகக் கருதப்படும் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள், விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இம்மோசடி சம்பந்தமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் மற்றுமொருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## பல்க. மாணவர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சார்ந்த உயிரியல்துறை மூன்றாம் வருட மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று அங்கு சிரமதான பணி மூலம் சுற்றாடலைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டனர்.

## ஒரு ஏக்கரில் மூலிகைச் செய்கை

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் 1 ஏக்கர் நிலத்தில் மூலிகைச் செய்கையை மேற்கொண்டுள்ளது. விவசாயபீட மண்ணியற் பிரிவுத் தலைவர் கலாநிதி. க. சிவகடாட்சம் அவர்களாலேயே இம்மூலிகைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைக்க இம்மாவட்ட சித்த, ஆயுர்வேத வைத்தியர் பல காலமாக முயற்சிகள் மேற்கொண்டும் முடியாது போயுள்ள இவ்வேளையில் மூலிகைச் செடி உற்பத்திக்கு 10ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டு அதில் 1 ஏக்கர் நிலத்தில் உடனடியாக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (49)

## பனி மழையினால் 155 பேர் மரணம்

(டில்லி)

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நாடுகளில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் பனிமழையினால் இது வரை 255 பேர் உயிர் இழந்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் பனி மழையினால் இந்தியாவில் 86 பேரும், பாகிஸ்தானில் 44 பேரும், பங்களாதேஷில் 25 பேரும் உயிர் இழந்துள்ளனர்.

# அமெரிக்க இராணுவம் ஈராக்கிய எல்லையில் குவிப்பு

(பரிஸ்)

ஈராக்கிய எல்லையில் அமெரிக்க விமானப்படைகளும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் சமாதானத்திற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குவைத் நேரத்தின்பிரகாரம் இன்றுகாலை 8.30 மணியுடன் (இலங்கைநேரம்காலை10 30) ஐ. நா. சபையின் காலக்கெடு முடிவடைகிறது. இந்த இடைவெளியில் சமாதானத்தை ஏற்படுத்த பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சர் ரொனாலட் சுமார்பாக்தாத்சென்றுள்ளார்.

## படைகள் குவிப்பு

இதேவேளை யுத்த முஸ்தீபுகளும் வளைகுடாவில் ஏற்பட்டுள்ளன. ஈராக் எல்லையில் 450 யுத்த விமானங்களையும், மேலதிகமாக 30, 000 இராணுவத்தினரையும் அமெரிக்கா இறக்கியுள்ளது. மொத்தமாக சவூதி அரேபியாவில் ஆறு லட்சம் பன்னாட்டு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

குவைத்தில் இருக்கும் ஐந்து லட்சம் ஈராக்கிய இராணுவத்தினரையும், ஆயிரக்கணக்கான டாங்கிகளையும், இரசாயன ஆயுதங்களையும் சமாளிக்க, வெற்றிகொள்ள தாம் தயார் நிலையில் இருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார். அணுவாயுதம் பாவிக்கப்படுவது குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

ஈராக்கும் போருக்கான நிலையை ஏற்படுத்தி வருகிறது. சில இரகசியத்திட்டங்களை தாம் வைத்திருப்பதாகவும் தமது முதல் இலக்கு இஸ்ரேல்தான் என்றும் தெரிவித்துள்ளது. இரசாயன ஆயுதங்கள் அமெரிக்கா எதிர்பாராத இடத்திலேயே உபயோகிக்கப்படும் என்றும். ஆயிரக்கணக்கான சவூதி அரேபிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் எச்சரித்துள்ளது, இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த இராணுவத்திற்கும் ஈராக் பணித்துள்ளது.

## பாகிஸ்தானில் தூதுவர் திருப்பியழைப்பு

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்கா உலகெங்கிலும் உள்ள தமது தூதுவராலயத்தை எச்சரிக்கையாக இருக்கும்படி பணித்துள்ளது. பாகிஸ்தானில் இருந்து தமது தூதுவர்கள் அனைவரையும் திருப்பி அழைத்துள்ளது. அத்துடன் கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளும் தமது தூதரகங்களை பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றியுள்ளது.

பாகிஸ்தான், டென்மார்க், கனடா போன்ற நாடுகள் தாம் இஸ்லாமின் புனித நகரங்களான மெக்கா மெதீனா பாதுகாப்பிற்காகவே தமது படைகளை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தன.

## போரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

வளைகுடா யுத்தத்தைக் கண்டித்து நேற்றைய தினம் சிக்காகோ நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை அமெரிக்கர்கள் நடாத்தி உள்ளனர்.

வளைகுடா யுத்தத்தைக் கண்டித்து வெள்ளைமாளிகையை எச்சரிக்கும் வகையில் நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் சிக்காகோவில் ஐயாயிரம் பேர்வரை கலந்து கொண்டனர்.

அமெரிக்காவில் வேறிடங்களிலும் நேற்றையதினம் இதே போல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

# சவூதிமீது தாக்குதல் இல்லை; சதாம் ஹூசைன் கடிதம்

(பக்தாத்)

சவூதி அரேபியாவின் மீது ஈராக் தாக்குதலை மேற்கொள்ளப் போவதில்லை என்று இறுதிநேர அறிவிப்பாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசையின் சவூதி மன்னருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். ஆனால் சவூதி அரேபியா போரில் ஈடுபடுமானால் அதன் விளைவுகளைச் சவூதி அரேபியா எதிர்நோக்கவேண்டி நேரிடும் என்றும் சதாம் ஹூசையின் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வளைகுடாப் பகுதிக்கு ஏற்கனவே 10, 000 துருப்புக்களை அனுப்பியிருந்த பங்களாதேஸ் [?] பாகிஸ்தான், தான் புனிதஸ்தலமான மெக்காவைப் பாதுகாக்கத் துருப்புக்களை அனுப்பியுள்ளதாக நேற்று அறிவித்துள்ளது.

## வவுனியா

...யா நகரப் பகுதியில் அப்பாவிப்பொது மக்கள்மீது இராணுவத்தினரின் தூண்டுதலின் பேரில்சிங்களக்காடையர்களும் நாட்டாண்மையினரும் பலத்த தாக்குதலை மேற் கொண்டனர்இத்தாக்குதலில் 15பொது மக்கள் காயமடைந்தனர்.

இதனால் நகரப்பகுதியில் தமிழ்ப் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டியுள்ளது.

இதேவேளை வவுனியாவுக்கு அப்பால் செல்லும் பயணிகள் தமிழும் முகாமில்

## கொழும்பு

...ரது நெருங்கிய உறவினரோ உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட திகதியில் சமூகம் கொடுக்க வேண்டும்.

இதற்கு முன்பு வைத்திய சாலையில் பதிவு செய்தோரும் மீண்டும் இத்திகதிகளில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். கூடச் செல்பவரின் முழுப்பெயரும் தெரிவிக்க வேண்டும்.

கப்பல் புறப்படும் திகதி பின் அறிவிக்கப்படும். (8)

## தமிழக தி. மு. க.

...ளுமன்றத்தின் லோக்சபை

# எமது மூலவளங்களுடன் தொழில்கள் ஆரம்பிக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

— ராஜன்

இன்றைய காலகட்டத்தில் நாம எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்க எமது மூலவளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய தொழிற்திட்டங்களை தமிழீழத்தில் ஆரம்பிக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு கடந்த திங்கட்கிழமையன்று பிற்பகல் 2மணிக்கு நல்லூரில் காகிதத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ராஜன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

''இந்தக் காலத்தில் ஒரு தொழிலை ஆரம்பிக்கலாமோ? தொழில் நிலைக்குமா எனத் தயங்காது ஒவ்வொருவரும் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். எமது விடுதலைப் போராட்டம் தனியே அரசியல் ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியிலும் வெற்றிபெறவேண்டும். இதற்குத் தமிழீழ மக்கள் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்'' என்றார்.

காகித ஆலையின் ஆரம்ப வைபவத்தில் யாழ். கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவு அதிகாரிகளும், மாணவர்களும் கலந்து கொண்டனர். (மூ)

# கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பணமாக விநியோகம்

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் காசாக வழங்கப்படுகின்றன.

மேற்படி 3 மாதங்களுக்குமான ஓய்வூதியத்தை இதுவரை பணமாகவோ அல்லது காசோலையாகவோ பெறாதவர்களுக்கே தற்போது வழங்கப்படுகிறது. இவர்கள் தமது மாதாந்த ஓய்வூதியத்தொகையில் 75வீதத்தை அல்லது ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நினைவஞ்சலிக் கூட்டம்

பிரபல கலை மற்றும் விளையாட்டுத்துறை பிரமுகரும், சமூகத்தொண்டருமாகிய இ. க. குமரையா அவர்களது நினைவஞ்சலிக்கூட்டமும் உருவப்படம் திரைநீக்கமும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

## லித்வேனியாவில்

இதனைத் தொடர்ந்தே ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் இவ்வாறு அறிவித்துள்ளன. 'நேட்டோ'வும் இதனை கண்டித்து அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

இதே வேளை அமெரிக்கா தான் சோவியத் மீது பொருளாதார தடைகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது அத்துடன் இனி நடைபெற இருக்கும் ஜேர்ஜ்

## லொறியிலிருந்து உதிரிப்பாகம் திருட்டு

(புங்குடுதீவு)

பழுது காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியிலிருந்து கடந்தவாரம் பல பெறுமதியான உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளன. சங்கத்தின் கிளை ஐந்தில் உள்ள தரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்பதும்,இப்பகுதியில்கடந்த சில வாரங்களாக இத்தகைய திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்பதும் குறிப்பி...

நடாத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் சிக்காகோவில் ஐயாயிரம் பேர்வரை கலந்து கொண்டனர்.

அமெரிக்காவில் வேறிடங்களிலும் நேற்றையதினம் இதே போல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## வங்கி பேஓடர் தவறிவிட்டது

(நல்லூர்)

திருமகள் வீதிக்கும் நாயன்மார் வீதிக்குமிடையில் நேற்றுரூபா 8,000 க்கான மக்கள்வங்கிப் பேஓடர் ஒன்று தவறிவிட்டது. இது செ. சைலேஸ்வரி என்ற பெயருக்கு எழுதப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் யாழ். மக்கள் வங்கிக்கிளைகள் ஏதாவது ஒன்றில் ஒப்படைக்கலாம்.

**வாகன**

திருச் சொந்தமான என்பது வாகனங்களைச் சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் அபகரித்துள்ளனர்.

மலேரியா தடுப்பு இயக்கத்திற்கு வெளிநாடுகளில் இருந்து அன்பளிப்பாகக் கிடைத்த 83 வாகனங்களில் 80 வாகனங்கள் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தி வருவதால், மலேரியா சரித்திரத்தில் இதுவரை நோயாளிகள் காணப்படாத மேல்மாகாணத்தில் கூட மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், நாட்டில் பரவி வரும் மலேரியாவைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு முழுக்கவனம் எடுப்பினும் இரண்டு வருட காலத்திற்கு மலேரியா பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையுள்ளது என மேலும் அந்த அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ளார் இத்தாக்குதலில் 15 பொது மக்கள் காயமடைந்தனர்.

இதனால் நகரப்பகுதியில் தமிழ்ப் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டியுள்ளது.

அதேவேளை வவுனியாவுக்கு அப்பால் செல்லும் பயணிகள் தங்கும் முகாமில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்பொருள் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது.

வடபகுதியில் இருந்து வெளியேறுவோர் வவுனியாவில் இராணுவத்தின் சோதனைகளுக்காக வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவினரால் உணவுப் பொருள்களும் விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்த விநியோகம் தற்பொழுது செயலக அதிகாரிகளால் நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் வெளியில் சென்று உணவு எடுக்க முடியாத நிலையில் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர். க)

**விரைவில்**

கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் மேலதிக அரச அதிபர் குறிப்பிட்டதுடன் பல இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியில் பெருமுயற்சி செய்து இந்த பத்திரங்களை பெற்றுக் கொண்டதில் வெற்றி கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

இதுதவிர யாழ். அரச அதிபர் மீண்டும் எப்போது தமது அலுவலகத்துக்கு வருவார் என கேட்டபோது அண்மையில் சில தினங்களுக்கு முன்னர் யாழ்வர பலமுயற்சிகள் எடுத்து மதவாச்சி வரையும் எமது அரச அதிபர் வந்தார் ஆனால் தமது பயணத்தை தொடர முடியாது திரும்பிச் சென்று விட்டார் என தமக்கு தகவல் கிடைத்ததாகவும் அவர் கூறினார். (லோ)

வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். கூடச் செல்பவரின் முழுப்பெயரும் தெரிவிக்க வேண்டும்.

கப்பல் புறப்படும் திகதி பின் அறிவிக்கப்படும். (8[illegible])

**தமிழக தி. மு. க.**

ளுமன்றத்தில் லோக்சபையில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், தமிழ் நாட்டு அரசைத் தொடர்ந்தும் பதவியில் அனுமதிக்கக் காரணமில்லை என்று இந்திரா காங்கிரஸின் பேச்சாளர்களான வி. என். காட்கியும், எம். கே. அக்பரும் தெரிவித்துள்ளனர்.

மாநில அரசாங்கத்தைக் கலைப்பதற்கு முன்னதாக தான் நூறு தடவைகள் யோசிக்க வேண்டும் என்று சந்திரசேகர் தெரிவித்திருப்பது பற்றிக் கேட்டபோது, கருத்துத் தெரிவித்த எம். கே. அக்பர், சந்திரசேகர் ஆயிரம் தடவைகள் வேண்டுமானாலும் சிந்திக்கட்டும், ஆனால் விரைவாகச் சிந்திக்க வேண்டும் என்றார்.

இது இப்படியிருக்க, தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் அரசைப் பதவி நீக்கிக் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவரும் நோக்கம் உண்டா என்று புவனேஸ்வரியில், செய்தியாளர் பிரதமர் சந்திரசேகரிடம் கேட்டபோது, அத்திட்டமே இல்லை என்று பதிலளித்தார்.

முதலமைச்சர் மு. கருணாநிதி மீது புகார்கள் தெரிவித்து, அவரைப் பதவி நீக்கம் செய்வதுபற்றி அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர், செல்வி ஜெயலலிதா செய்த முறையீடு பற்றி செய்தியாளர் கேட்டபோது அந்த முறையீட்டு மனுவைத் தான் பார்த்ததாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய திட்டம் எதுவும் இல்லை என்றும் பிரதமர் சந்திரசேகர் கூறினார். அஸாம் மாநிலத்தில் தீவிரவாதிகள்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால், தமிழ்நாட்டில் புலிகளும் தனித்து விட்டனர் என்றார் பிரதமர்.

வித்துள்ளன. 'நேட்டோ'வும் இதனை கண்டித்து அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

இதே வேளை அமெரிக்கா தான் சோவியத் மீது பொருளாதார தடைகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது அத்துடன் இனி நடைபெற இருக்கும் ஜோர்ஜ் புஷ்-கொர்பசேவ் உயர் மட்டப் பேச்சுக்கள் நடைபெறுவது குறித்தும் பரிசீலனை செய்யப்படுவதாகவும் ஜனாதிபதி மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வளைகுடாவில்**

ஏற்றுக்கொண்டால் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஈராக் சென்று பேச்சுவார்த்தை நடாத்துவாரென பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இத்திட்டத்தை அமெரிக்கா, பிரிட்டன், சோவியத்யூனியன் என்பன எதிர்க்கின்ற அதேவேளை ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகளில் முன்னணி நாடான ஜெர்மனியும், நெதர்லாந்து, பெல்ஜியம் என்பனவும் ஆதரிக்கின்றன.

பிரான்சின் கடைசிநேர முயற்சிபற்றி கருத்து வெளியிட்ட ஐ. நா. செயலாளர் கொயிலர் போர் ஏற்படாமல் தடுக்க 24 மணி நேரமும் தொடர்ச்சியாக சபைக் கூட்டத்தை நடாத்தத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

**அனாதரவாக**

பொதுமக்களால் இறந்த நிலையில் மீட்கப்பட்ட இந்தப்பெண்சிசுபற்றி விடுதலைப் புலிகளுக்கு தகவல்கொடுக்கப்பட்டது. இவர்கள் இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். சிசு பொதுமக்களால் அடக்கம் செய்யப்பட்டது. (ச)

**மாணவர்**

அரங்கிற்குஎடுத்துக் காட்டவே இவ் ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

[illegible] இருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலத்தில் உயர் வகுப்பு மாணவர்கள் பங்குபற்றுவார்கள் (க)

சங்கத்தின் கிளை ஐந்தில் உள்ள தரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்பதும், இப்பகுதியில் கடந்த சில வாரங்களாக இத்தகைய திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது (22)

**தொழிற்**

ன்ற உணவுப் பொருட்கள் தயாரிப்பு முதலிய பல்வேறு தொழிற் பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருவதால் இதில் பங்கு கொள்ள விரும்புவோர் இன்று காலை முறைசாராக் கல்வி அதிகாரியைச் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர் இப் பயிற்சி வகுப்புக்கள் தென்மராட்சி வடமராட்சி தீவுப் பகுதி என்பவற்றிற்கும் தனித்தனியே நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது (மு)

**குளத்தில்**

அயல் வீட்டுச் சிறுமியுடன் விளையாடுவதற்காக சென்ற இச்சிறுமி புங்குடுதீவு பனை நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அருகில் உள்ள குளத்தில் தவறுதலாக விழுந்ததனால் உயிரிழந்துள்ளார். (22)

**மூன்று பி. எல். ஓ.**

பி. எல். ஓ வின் மெய்ப்பாதுகாப்பாளர் இந்த படுகொலைகளைச் செய்ததாக பி.எல்.ஓ கூறுகிறது. ஆனால் பி. எல். ஓ போட்டிக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஒரு தரப்பினர் கூறுகின்றனர் கொல்லப்பட்ட ஒரு அதிகாரியின் மனைவியையும் மகளையும் பணயக்கைதியாப்பிடித்துச்சென்ற மெய்ப்பாதுகாப்பாளர் பி. எல் ஓவால் பிடிக்கப்பட்டதாக பி எல். ஓ அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஆனால் இஸ்ரேலுக்கும் இக்கொலைகளுக்கும் தொடர்பில்லை என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் நேற்றுத் தொலைக் காட்சியில் மறுத்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.